செ.கு.எண் : 70

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 16.2.2012

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பூத்துறையைச் சேர்ந்த திரு. பிரடிசான்போஸ்கோ என்பவருக்கு சொந்தமான கப்பல் கேரள மாநிலம் கொல்லம் கடல் பகுதிக்கு 15.2.2012 அன்று மீன் பிடிக்க சென்ற போது, அயல் நாட்டு வணிகக் கப்பலில் இருந்த ஒருவர் சுட்டதில், மீன் பிடி கப்பலில் இருந்த கன்னியாகுமரி மாவட்டம், இரையுமன்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. அந்தோணி சேவியர் என்பவரது மகன் அஜீஸ் பிங்கோ உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இத்துப்பாக்கிச் சூட்டில் அகால மரணமடைந்த அஜீஸ் பிங்கோ குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இத்துயரச் சம்பவத்தில் காலமான அஜீஸ் பிங்கோவின் குடும்பத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை.